இனி ந்யாயஸித்தாஞ்ஜனஸ்ரீஸூக்தியை பராமர்ஶிப்போம். இங்கு 'स्त्रीविधुराणामपि जपोपवासाद्यङ्गाधिकृतानां ब्रह्मविद्याधिकारोऽस्त्येव' என்ற பங்க்திக்கு வ்யாக்யாதாக்கள் மைத்ரேயி, ரைக்வர்களை உதாஹரித்திருந்தாலும், இங்கு உபநிஷத்பாஷ்யகாரர் வ்யாக்யானத்தில் அவதாரிகை 'अन्तरा चापि तु तद्दृष्टेः' என்ற ஸூத்ரார்த்தத்தை திருவுள்ளத்தில் கொண்டு கூறிகிறார் என்றிருப்பதால், இது பொருந்தாததை உ.வே. அபிநவதேஶிக ஸ்வாமி டிப்பணியில் விது(धु)ராதிகரணத்தில் ஸ்த்ரீகளுக்கு ப்ரஹ்மவித்யாதிகாரம் விசாரிக்கப்படவில்லை என்றும் உபநிஷத்பாஷ்யத்தில் காணப்படுவதாகவும் கூறயுள்ளாதால் இதுவும் அந்யதா நிர்வஹிக்க முடியலாம். இதற்கு ஒரு வழி - மைத்ரேயிவிஷயத்தை வ்யக்திவிஶேஷவிஷயமாக நியமிக்கலாம். அல்லது காலவிஶேஷப்ரயுக்ததர்மமாக உபபாதிக்கலாம். 'पुराकल्पे तु नारीणां मौञ्जीबन्धनमिष्यते' என்ற ஸ்ம்ருதிப்படி இது கூடும். (இங்கும் ஒரு வேடிக்கையான ஸமாதானம். स्त्रीविधुराणां = स्त्रिया विधुरणाम् । அதாவது स्त्रीविधुराणां என்று விது(धु)ரர்களையே குறிப்பதாகச் சொல்லலாம்.) மேலும் जपोपवासाद्यङ्गाधिकृतानाम् என்கிற ஹேதுவை பராமர்ஶித்தால் கீழே காட்டிய ரஹஸ்யத்ரயஸாரபங்க்திவிரோதம் பரிஹரிக்க வேண்டியதாகிறது. எப்படியும் ப்ரஹ்மவித்யை என்று பக்தியோகத்தையே சொல்ல வேண்டியதால் இப்படிப்பட்ட க்லேஶங்கள் அநிவார்யங்கள். அல்லது 'अत्र ब्रूमस्सदुक्तौ न वयमिह मुधा बाधितुं किञ्चिदर्हाः निर्वाहस्तूपचारात्क्वचिदिति घटते ह्येकतात्पर्ययोगः' என்று ஸாராவளியில் ஸ்வாமி ஸாதித்தபடி இந்த ஸூக்திக்காக உதாஹ்ருத ந்யாயபரிஶுத்தி, ஸேஶ்வரமீமாம்ஸை, ஸாராவளி, ரஹஸ்யத்ரயஸார, ஸ்ரீபாஷ்யாதி பங்க்திகளை யதோசிதம் நிர்வஹிப்பது.

இவ்வளவால் ஸ்ரீபாஷ்யாதிஶ்ரவணம் ஸ்த்ரீகளுக்குக் கூடுமானாலும் வேதாத்யயன, ப்ரஹ்மவித்யாதிகாரங்கள் கூடாதென்று அடியேனுடைய அபிப்ராயம். இதற்கு மேல் விபஶ்சித்தமர்களான வித்வான்கள் ப்ரமாணம்.

வாசிகதோஷ: க்ஷந்தவ்ய:

श्रीः ।

## விமர்ஶ பராமர்ஶம்

*(மேற்கண்ட வ்யாஸத்திற்கு ஸ்ரீ உ.வே. புரிசை ந. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி அனுக்ரஹித்த விமர்ஶனம்)*

2.11.90

கேள்வி - (1) வேதாத்யயனம் என்று எதைக் கூறுகிறார்? ப்ரம்ஹவித்யை என்று எதைக் கூறுகிறார் என்பது விளங்கவில்லை.

பதில் - 'வேதாத்யயனம் பண்ண அதிகாரமில்லாவிடினும்' .... 'ப்ரம்ஹவித்யையில் ஸ்த்ரீகளுக்கு அதிகாரமிருப்பதால்', என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் இரண்டும் வெவ்வேறு என்று ஸ்பஷ்டமாகத் தெரியவில்லையா? இதில் குழப்பத்திற்கு காரணம் என்ன? நான் விளக்கமில்லாமல் கூறியிருக்கிறேனா? (ஸ்ரீபாஷ்யாதி காலக்ஷேபம் பண்ணியவர்களுக்கு விவாதத்தின் போது இவ்வளவு தானே குறிப்பிடமுடியும்.) உமக்கு விளங்கவில்லையா? நீரே பிறகு விவரித்து உள்ளீரே!

2வது கேள்விக்கு பதில் - ஒரு அர்த்தத்தை ஶாரீகஶாஸ்த்ரத்தில் கூறாவிட்டாலும் அதிலுள்ள ந்யாயப்படி (देवताधिकरणन्यायப்படி) மற்றோரிடத்தில் மற்றவர்கள் ஸித்தாந்தத்தை கூறுவதில் பாதகம் என்ன இருக்கிறது? ஶப்தமஞ்சரியில் கூட ராமஶப்தத்தைச் சொல்லிவிட்டு ஏவம் க்ருஷ்ண: முகுந்த: இத்யாதய: என்று குறிப்பிட்டுள்ளார்களே. இதில் விளங்காதது என்ன என்று தெரியவில்லை.

3வது கேள்விக்குப் பதில் - ஸ்த்ரீகளின் விவாஹத்தை உபநயன ஸ்தானத்தில் படிக்கப்பட்டுள்ளது. இதனால்தான் அஸ்ப்ருஶ்யஸ்பர்ஶதோஷமானது உபநீதர்களுக்குப் போல் ஸ்த்ரீகளுக்கும் உண்டாகிறது என்று ஸ்ம்ருதிகளில் கூறப்பட்டுள்ளதை ப்ரமாணமாகக் கொண்டு எழுதியுள்ளோம். த்ருஷ்டாந்தத்தில் உள்ளவைகள் யாவும் தார்ஷ்டாந்திகத்தில் ஒத்திருக்க வேண்டும் என்று இல்லை. உபநீதன் கச்சம் கட்டிக் கொள்வதில்லை, விவாஹமான ஸ்த்ரீ கச்சம் கட்டிக் கொள்ளுகிறாளே இத்யாதிகளை கேள்வியில் கேட்காமல் விட்டதைப் பற்றி ஸந்தோஷப் படுகிறேன்.

4வது கேள்விக்குப் பதில் - ஸ்ம்ருதிக்கும் ஆசாரத்திற்கும் விரோதமிருப்பதைச் சுட்டிக் காண்பித்து ஶிஷ்டாசாரத்தை ப்ரமாணமாகக் காட்டி அதற்கு அநுகுணமாக ஸ்ம்ருதியின் அர்த்தத்தை எழுதியுள்ளேன். அதாவது ஸ்த்ரீகள் வேதத்தை காதால் கேட்கக் கூடாது என்பதில்லை, அத்யயனம் பண்ணக் கூடாது என்பதுதான் அதற்கு அர்த்தம் என்று மறைமுகமாக விளக்கியுள்ளேன். இம்மாதிரியாக தேவரீரும் ஸ்த்ரீகளுக்கு ப்ரம்ஹவித்யையில் அதிகாரம் உண்டு என்கிற ஸ்ம்ருதிவசநத்தை எடுத்துக் காட்டி அவ்வசநத்திற்கும் ஶிஷ்டாசாரத்திற்கும் விரோதமிருப்பதால் அந்த ஸ்ம்ருதிவசநத்திற்கு இவ்விதம்தான் அர்த்தம் கொள்ள வேண்டும் என்று எழுதினால் அதை ஶிரஸால் ஏற்றுக் கொள்ள ஸித்தமாக இருக்கிறேன். நான் எழுதியிருப்பதை நன்கு பராமர்ஶிக்காமல், அதாவது அதிகரணார்த்தவிசாரத்தில் கேவல ஶிஷ்டாசாரத்தை மட்டும் சொல்லி ஸமாதானம் சொல்லிவிட்டதாக எண்ணக் கூடாது என்பதேயாம். மறுபடியும் கடைசிபாராவை வாசித்து யோசித்து ப்ரதிவக்தாக்களுக்கு இந்த சலுகை மறுக்கப்பட்டு இருக்கிறதா? என்பதை உணரவும்.

அடுத்தபடியாக எழுதியுள்ளதை பராமர்ஶிப்போம். வேடிக்கை யுக்தி என்பதாலேயே உமக்கே நீர் எழுதுவது ப்ரமாணமாகாது என்று தெரிந்திருந்தும் அதை எழுதுவது ஸாஹஸமாகும். 'स्त्रियो वैश्याः तथा शूद्राः' என்று ஸ்த்ரீஶூத்ரருடைய மத்தியில் வைஶ்யனை கீதையில் கண்ணனே சொல்லி இருக்கிறாரே! அதனால் வைஶ்யர்களுக்கும் வேதாத்யயனத்திலும், உபாஸனத்திலும் அதிகாரம் இல்லை என்று சொல்லவும் துணியலாம்.

1) 'ஸ்த்ரீகளுக்கு வேதாத்யயன ஶ்ரவண நிஷேதக ஸ்பஷ்டதா ஶ்ருதி அடியேனுக்கும் தெரியவில்லை' என்று எழுதியிருப்பதைப் பற்றி ஸந்தோஷம். ப்ரம்ஹவித்யா விசாரத்திலேயே உபநயன ஸ்தானத்தில் விவாஹம் என்றும், அவர்கள் பூர்ணமாக வேதாத்யயனம் பண்ணக்கூடாது என்றும் விதிக்கப்பட்ட மந்த்ரங்களையே சொல்லலாம் என்றும் சொல்லியிருக்க, ஸ்த்ரீகளுக்கு வேதாத்யயனத்தில் அதிகாரமில்லை என்று அதைப் பற்றியே பிஷ்டபேஷணம் பண்ணி அதிகமாக விசாரித்திருப்பது வ்யர்த்தமேயாகும். 'यावन्तो मन्त्राः ....' என்று தேவரீரும் குறிப்பிட்டு இருக்கிறது. இவ்விஷயங்களில் அபிப்ராயபேதமில்லை.

2) ஸ்த்ரீகளுக்கு விவாஹத்தை உபநயன ஸ்தானமாகக் கொள்ளலாம் என்று எழுதியிருக்கிறது. யாரும் விவாஹத்தை உபநயன ஸம்ஸ்காரமாக சொல்லவில்லையே. 'संस्कारपरामर्शात्' என்கிற ஸூத்ரத்தில் அர்த்தத்தை தெரிவிக்கும் போது, ஸ்த்ரீகள் விஷயத்தில் இது பாதகமாகாது என்றுதானே குறிப்பிட்டிருக்கிறது. அங்கு எழுதியுள்ள ஸம்ஸ்காரத்தை தேவரீரும் பராமர்ஶிக்கவும். 'இதனாலேயே ஸ்த்ரீகளுக்கு த்விஜத்வம் தடுக்கப்படுகிறது' என்று எழுதியிருப்பது அதிஸாஹஸமாகும். த்விஜனாகாத - அநுபநீதனான ப்ராஹ்மணச் சிறுவனுக்கு எவ்விதம் ஸமிதாதானாதி அக்னிகார்யங்களில் அதிகாரம் கிடையாதோ அவ்விதமே விவாஹமான ஸ்த்ரீகளுக்கும் ஔபாஸன, பஞ்சமஹாயஜ்ஞாதிகளிலும்

அதிகாரம் இல்லை என்று சொல்ல வேண்டிவரும். காஶிகா வ்ருத்தியில் 'गोत्रश्च चरणैः सह' இதி जातिलक्षण-ङीष् விதிக்கும் போது சில விசாரங்களைச் செய்து ஸ்த்ரீகளுக்கு அத்யயனத்தில் அதிகாரமில்லாததால் कठஶப்தவாச்யத்வம் बह्वृचஶப்தவாச்யத்வஞ்ச தத்வம்ஶ்யமாணவகனுக்கு தத்ஶப்தப்ரயோகவத் என்று ஸமாதானம் கூறப்பட்டுள்ளதை கவனிக்கவும். ஆக த்விஜத்வம் ஸ்த்ரீகளுக்கும் (அத்யயனத்தில் அதிகாரம் இல்லாவிடினும்) உண்டு.

'जपस्तपः तीर्थसेवा प्रव्राज्यं मन्त्रसाधनम् । देवताराधनं चेति स्त्रीशूद्रपतनानि षट् ॥' என்று உதாஹரிக்கப்பட்டதை காட்டியுள்ளீர். மிகவும் ஸந்தோஷம். நமது குடும்பங்களில் பஞ்சஸம்ஸ்கார அனந்தரம் அஷ்டாக்ஷர, த்வய, சரமஶ்லோக, ஸ்ரீபஞ்சாக்ஷராதி மந்த்ரங்களை ஸ்த்ரீகள் ஜபித்து வருவதை உங்கள் குலத்திலும் எங்கள் குலத்திலும் காண்கிறோம். இதை அபலபிக்க முடியாது. அவர்கள் பதிதைகள் என்று சொல்லக் கூடுமோ? காயக்லேஶ ரூபமான ஏகாதஶ்யாதி திதிகளில் உபவாஸங்கள் இருந்து வருகிறார்கள், தீர்த்த யாத்ரையும் செய்து வருகிறார்கள். இவ்விதமே ஶூத்ராதிகளும் இருக்கக் காண்கிறோம். ஆறில் மூன்று தவறாகி விட்டதே! என் செய்வீர். இதன் ஸூக்ஷ்மார்த்தத்தை விசாரித்தீரானால் உண்மை விளங்கும்.

ஸ்வாமியின் ந்யாயஸித்தாஞ்ஜன ஸ்ரீஸூக்திக்கு விரோதமாக வருஷஶதமானாலும் நம்மைப் போன்று ஶதஸஹஸ்ரம் பேர் கூடினாலும் பதில் சொல்லமுடியாது. தேஶிகனின் ஸ்ரீஸூக்தி ஶிலாலிகிதம் போல் ஸ்திரப்ப்ரதிஷ்டிதமானது. இதை சதுஶ்ஶாஸ்த்ரவேத்தாவான திருப்புட்குழி ஸ்வாமியும், ஷஷ்டிப்ரபந்த நிர்மாதாவான உபநிஷத்பாஷ்யகாரரும் அங்கீகரித்துள்ளார்கள். 'अप्रतिविद्धम् अनुमतं भवति' என்கிறபடி அபிநவதேஶிகரும் அங்கீகரித்துள்ளார். ராமானுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹத்தில் ஜீவபரிச்சேதத்தில் 88வது பக்கத்தில் இந்த ஸ்ரீஸூக்தியை எடுத்திருப்பதைக் காணலாம். அப்பையதீக்ஷிதரும் ஶங்கரபாஷ்யத்தில் கல்பதரு பரிமளத்திலும் (அபஶூத்ராதிகரணத்தில்) ஸ்த்ரீகளுக்கு ப்ரம்ஹவித்யையில் அதிகாரமுண்டு என்பதை ஸித்தவத்க்ருத்ய கூறியிருப்பதை கடாக்ஷிக்கவும். (பரிமளத்தில் 'த்ரபுஜதுப்யாம்' என்கிற ப்ரதீகத்தில் இது உள்ளது. 'वेदाध्ययनरहितानां स्त्रीणामिव विद्यानुष्ठानं किन्न स्यात्' என்று உள்ளது). பரிமளத்திலேயே இதற்கு முன் 351வது பக்கத்தில் 'इदं तु चिन्त्यते' என்று ஆரம்பித்து 'अन्यथा - मैत्रेयी वाचक्नवी प्रभृतीनां विद्यानुष्ठाने का गतिः' என்று உள்ளதையும் உற்று நோக்கவும். முன்பே भावप्रकाशिकैயில் உள்ளதைக் காட்டி உள்ளோம். तत्त्वमुक्ताकलापத்தில் जीवपरिच्छेदத்தில் 'पुंवद्भिः' என்று ஆரம்பிக்கும் 42வது ஶ்லோகத்திலுள்ள सर्वार्थसिद्धिயில் உள்ளதையும் ஸேவித்து மகிழலாம். அங்கு 'स्त्रियो वैश्यास्तथा शूद्राः' என்று மூன்று பாபயோநிகளை எடுத்து ஶூத்ரர்களுக்கு மட்டும் உபாஸனத்தில் அதிகாரமில்லை என்பதாக அபஶூத்ராதிகரண ந்யாயத்தைக் காட்டி உள்ளார். பிறகு ஶரணாகதியில் அவர்களுக்கு அதிகாரம் உண்டு என்பதையும் தெளிவு படுத்துகிறார். இவ்விதம் ப்ராசீன வேதாந்திகள் எல்லோரும் மதபேத(ஸித்தாந்தபேத)ம் அன்றிக்கே, ஸ்த்ரீகளுக்கு ப்ரம்ஹவித்யையில் அதிகாரம் உண்டு என்று ஸாதித்திருப்பதை அபலபிக்க முடியுமோ?

மஹான்களின் ஸ்ரீஸூக்திகளை கேடயமாக - ப்ரமாணமாகக் கொண்டு அடியேன் எழுதியுள்ள பூர்வபக்ஷம் என்கிற ஸித்தாந்தத்தை கண்டித்து விட்டதாக ஸந்தோஷப்படமுடியுமோ?

கடைசியில் 'இவ்வளவால் ஸ்ரீபாஷ்யாதிஶ்ரவணம் ஸ்த்ரீகளுக்கு கூடும் ஆனாலும் ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் கூடாதென்று அடியேனுடைய அபிப்ராயம்' என்று முடித்திருப்பது தேஶிகன் ஸ்ரீஸூக்திக்கு விருத்தமானது, தேஶிக ஸம்ப்ரதாயஸ்தர்களான நாமே தேஶிகாஶயத்தை குறை கூறுவது உசிதமாகுமா?

விதுராணாம் என்று சொன்னாலே ஸ்த்ரீவிதுரர் என்று அர்த்தம் கிடைக்கும் போது, ஸ்த்ரீஶப்தம் எதற்கு? உபநிஷத் பாஷ்யகாரரும், திருப்புட்குழி ஸ்வாமியும் 'மைத்ரேயீ ப்ரப்ருதிகள்' என்று வ்யாக்யானம் செய்திருக்கும்போது, அதிஸாஹஸமாய் ஹடாத்காரமாய் வேடிக்கை என்று ஒரு அர்த்தம் பண்ணுவது எல்லோரையும் அவமதிப்பதாகும். ஶாஸ்த்ரார்த்த விசாரங்களில் நேரில் பேசுவது போல் வேடிக்கை வார்த்தைகளை எழுதுவது கூடாது என்பதை விசாரரஸிகரான நீர் ஏன் அறியவில்லை?

இதுவரையில் பேசப்படாததான - நம் நடைமுறையில் இல்லாததான ப்ரம்ஹவித்யா விசாரத்தை நான் எழுதியதில் என்னுடைய உள்நோக்கம் ஸ்த்ரீகளுக்கு ப்ரம்ஹவித்யா ஶ்ரவணத்தில் அதிகாரம் உண்டு என்பதாகும். அதை அங்கீகரித்து விட்டீர். தேஶிகன் ஸ்ரீஸூக்தியை நிராகரித்து விட்டீர். என்னுடைய க்ருதியை கண்டிக்க ஆரம்பித்து, ஸ்ரீதேஶிகஸூக்திகண்டனத்தில் முடிந்திருக்கிறது. अहो! बत महत्कष्टम्!

என்னுடைய லேகனத்தில் சிலபல கடுக்திகள் இருக்கலாம். எதற்காக அவ்விதம் எழுதினேன் என்றால் கருப்பங்கழியை கசக்கிப் பிழிந்து தானே ரஸத்தை வரவழைக்கிறார்கள். அதுபோல் உம்மிடத்திலிருந்தும் பல ரஸகனமான விஷயங்கள் வரவேண்டும் என்ற ஆசையினால் எழுதியுள்ளேன்.

-----------

இதரர்களைக் கொண்டு இதை எழுதியதால் ஸம்ஸ்க்ருதத்தில் எழுதவேண்டியதையும் தமிழில் எழுத நேரிட்டது. என்னைக் கண்டித்து எழுதுவதைப் பற்றி வருத்தமில்லை. ஸ்ரீஸ்வாமி ஸ்ரீஸூக்தியை எல்லாவிடங்களிலும் ப்ரமாணமாகக் காட்டும் நாம் இந்த ஸ்ரீஸூக்தியை மட்டும் ப்ரமாணமாகக் கொள்ள மறுப்பது ஏன்? 'मूर्धन्यनाडी' நாபியில் ஆரம்பித்து मूर्धापर्यन्तம் இருப்பதாகச் சொன்னதை 'शतं चैका च हृदयश्च नाड्यः' என்றே முடிவு செய்துள்ளவர்கள் மிகவும் கண்டித்தார்கள். ஸ்ரீதேஶிகன் ஸ்ரீஸூக்திக்கு உனக்கு அர்த்தம் தெரியாது என்றார்கள். கடைசியில் ஒப்புக் கொண்டார்கள். இது அபூர்வமானது, இதுவரை கேள்விப்படாத விஷயமானதால் எதிர்க்கத்தோன்றுகிறது. நன்றாக யோசித்தால் ஸ்வாமியின் ஸ்ரீஸூக்திக்கு விரோதமாக நாம் எப்படி அர்த்தம் சொல்ல முடியும்?